செ.வெ.எண். 22/மார்ச் தேதி : 09.03.2017

# தருமபுரி மாவட்டத்தில் மார்ச்/ஏப்ரல் 2016-ல் நடைபெற்ற பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் மாநில அளவில் சிறப்பிடம் பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு ரொக்கப் பரிசு மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன் அவர்கள் வழங்கினார்.



தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூடுதல் கூட்டரங்கில் மார்ச்/ஏப்ரல் 2016-ல் நடைபெற்ற பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் மாநில அளவில் சிறப்பிடம் பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு ரொக்கப் பரிசு மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன் அவர்கள் வழங்கினார்.

தருமபுரி மாவட்டத்தில் 2015-2016-ஆம் கல்வியாண்டில் மார்ச்/ஏப்ரல் 2016-ல் நடைபெற்ற பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் தமிழை ஒரு பாடமாக பயின்று, மாநில அளவில் தரம் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு ரொக்கப் பரிசு மற்றும் மாண்புமிகு தமிழக முதல்வர் பாராட்டுச் சான்றிதழ் தமிழக அரசால் வழங்கப்படுகிறது. நமது மாவட்டத்தில் 10-ஆம் வகுப்பில் மாநில அளவில் 500க்கு 498 மதிப்பெண்களுடன் இரண்டாம் இடம் பெற்ற தருமபுரி செந்தில் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவி மு. கலைப்பிரியா ரொக்கப் பரிசு ரூ. 20,000/-க்கான காசோலையுடன், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் பாராட்டுச் சான்றிதழ் பெற்றார். மாநில அளவில் மூன்றாம் இடம் பெற்ற தருமபுரி செந்தில் மெட்ரிக் பள்ளி மாணவர் மு.ச. சிவசூரியா, பாலக்கோடு வித்யா மந்திர் மாணவிகள் வா.ஹேமலதா, கு. இந்திரா, அரூர் ஜெயம் மெட்ரிக் பள்ளி மாணவிகள் சி. ஜனனி, வெ.கவிப்பிரியா, செ. திலோத்தினி, தருமபுரி ஸ்ரீவிஜய் வித்யாலயா பெண்கள் பள்ளி மாணவி பி. ஸ்ரீமதி, ஸ்ரீ விஜய் வித்யாலயா ஆண்கள் பள்ளி மாணவி கா.பிரின்ஸி லிடியா, எருமியாம்பட்டி இ.ஆர்.கே. பள்ளி மாணவி ச.பிரதீபா ஆகியோர் ரொக்கப் பரிசு ரூ. 15,000/-க்கான காசோலையுடன் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் பாராட்டுச் சான்றிதழ் பெற்றனர்.

இவ்விழாவின் போது அரூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆர்.ஆர். முருகன், மாவட்ட வருவாய் அலுவலர் திரு. அ. சங்கர், மாவட்ட கல்வி அலுவலர் திரு.டி.வி. பாலாஜி, உதவி மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர் திரு. எம். சுப்பிரமணியன்,

நேர்முக உதவியாளர் திரு.கே. கோவிந்தசாமி, பாலக்கோடு கூட்டுறவு சர்க்கரை ஆலை தலைவர் திரு. கே.வி. அரங்கநாதன், முன்னாள் நகரமன்ற தலைவர் திரு. எஸ்.ஆர். வெற்றிவேல் உட்பட மாணவ, மாணவிகள் பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.